Book 22

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்

## அவர் ஒவ்வொரு பொருளின் எண்ணிக்கைகளையும் எண்ணிவைத்துள்ளார்.

திருகுர்ஆன் 72:28

## உலகப் பொது மொழி கணிதம்

ஜூன் 2001 June

PUTHIYA NINAIVOOTAL

TAMIL MONTHLY

# உலகப் பொதுமொழி கணிதம்

அப்துல்லா ஆரீக்

நமது இந்தக் கலந்துரையாடல் நம்மைப் படைத்தவரின். இப்பிரபஞ்சத்தை எழுதியவரின் ஞானத்தைப் போற்ற நம்மை தூண்டவில்லையானால் அது பலனற்றதாக ஆகிவிடும். அவரே துவக்கத்தில் அனைத்தையும் இல்லாமையில் இருந்து. உண்டாக்கி அவற்றை எண்ணிக்கையாலும், அளவாலும், எடையாலும் மட்டுப்படுத்தி பின்னர் அவை புதுப்புது அற்புதங்களை. எவ்வளவு ஆராய்கிறோமோ அவ்வளவு அதிகமாய் வெளிப்படுத்துமாறு அமைத்தார்.

புத்த துறவி - ரோவிஸ்டா கந்தர்ஷீம் 980 AD

நாம் அனைவரும் ஏதேனும் ஒரு காலக்கட்டத்திலாவது படைப்புகளைப் பற்றி சிந்திக்க தூண்டப்பட்டிருப்போம். நம் வாழ்வின் காரணம் மற்றும் நம்மை படைத்தவரை பற்றிய சிந்தனை இவை சம்மந்தமான கேள்விகள். ஆதிகாலத்தில் இருந்தே ஆராயப்பட்டு வந்திருக்கின்றன. பிரபஞ்சத்தில் உள்ள ஒற்றுமைகளையும், ஒழுங்கையும் தற்செயல் அல்லது இயற்கை என்று கூறுவோரும் இருந்தே வந்திருக்கின்றனர்.

ஆனால் சற்றுக் கூர்மையுடன் கவனித்தால் பிரபஞ்சத்தில் ஒரு வடிவமும் வடிவமைத்தவரும் இருப்பதற்கான தெளிவான சான்றுகளைக் காணமுடியும்.

எல்லாத் துறைகளிலும் அன்றாடம் கண்டுபிடிக்கப்படும் கண்டுபிடிப்புகளும். இதை மேலும் தெளிவாக்குகிறது. பெரும்பான்மையான இன்றைய விஞ்ஞானிகள் நாத்திகர்களாகவே இருக்கின்றனர். அப்படி அவர்களுக்கு ஏதேனும் ஒரு மத நம்பிக்கை இருந்தால் அவர்கள் தங்கள் மார்க்கத்தையும். விஞ்ஞானத்தையும் வாழ்வின் தனித் தனித் தட்டுகளில் வைத்து விடுகிறார்கள்.

கணக்கு என்பது மிகவும் முன்னேறிய ஒரு துறையாக விஞ்ஞானிகளால் கருதப்படுகிறது. அங்கே காரணங்களுக்குத்தான் முதலிடம், உணர்வுகளுக்கு இடமில்லை அதில் நமக்கு உறுதியான அறிவு இருக்கிறது. அதில் நாம்

அறிந்திருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ள முடியும். மேலும் இன்றைய உண்மைகள் அங்கே என்றென்றும் உண்மைகளே. இடம், காலம், இன்னபிற வித்தியாசங்களால் அது மாறுவதில்லை. மறுபுறத்தில் மதம் என்பதோ காரணங்களால் பாதிக்கப்படாத நம்பிக்கையாக மட்டுமே கருதப்படுகின்றது. ஆகவே விஞ்ஞானிகளின் பார்வையில் எல்லா மதங்களும் ஒன்றே. ஏனெனில் அவை அனைத்துமே சரிபார்த்துக் கொள்ளவோ காரணங்களை அறிந்து கொள்ளவோ முடியாத நிலையில் இருக்கின்றன. எந்தவொரு விஷயமும் நிரூபிக்கப்பட்டதாக ஆகவேண்டும் எனில் அது இயற்பியலாக இருந்தாலும் சரி. தவ்ராத்திலுள்ள பத்து கட்டளைகளாக இருந்தாலும் சரி. அதற்கு நிரூபணங்கள் தரப்படவேண்டும். நிரூபணம் என்றால் அது சந்தேகத்தை முழுதும் போக்கக்கூடிய ஒரு அறிக்கை, ஓர் ஆதாரம், அங்கீகாரம். அது அதிகாரம் பெற்றது என்பதற்கு உரிய முத்திரை. ஆகவே நிரூபணம் என்பது தூய்மையான காரணங்கள் ஏற்படுத்தும் ஓர் சக்தி. நிரூபணம் என்பதோர் வழிமுறை. அதன்மூலம் பார்க்க முடியாத விஷயங்களைக் கூட காரணங்களைக் கொண்டும், கூட்டியும், கழித்தும் அறிந்து கொள்ள முடியும். அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும்.

கணக்கில் ஓர் கேள்வி என்றால் அக்கேள்விக்கு நிச்சயம் ஒரே ஒரு விடைதான் இருக்கும். ஆகவே வெவ்வேறு கணக்காளர்கள். வெவ்வேறு வழிமுறைகளில். வெவ்வேறு காலகட்டங்களில் செயல்பட்டார்களானாலும் அவர்கள் அனைவரும் அடைந்த ஒரே விடையைத்தான் அடைந்திருப்பார்கள். ஆக கணக்கியல் நிரூபணம் என்பது இட. கால வித்தியாசங்களால் பாதிக்கப்படுவதில்லை.

"**கணக்கெனும்** மொழியில்தான் கடவுள் பிரபஞ்சத்தை எழுதியிருக்கிறார்" என்பது கலிலியோவின் கூற்று. இது இப்பொழுது நிரூபிக்கப்பட்ட உண்மையாக ஆகிவிட்டது. பிரபஞ்சம் கணக்கியல் மொழியில் தன்னை இயல்பாக வெளிப்படுத்துகிறது. தூரம் அதிகமாவதற்கு ஏற்ப ஈர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. கிரகங்கள் சூரியனை நீள் வட்ட வடிவில் (Ellippses) சுற்றுகின்றன. ஆக கணக்கு என்பது பிரபஞ்சத்தை அறிந்து கொள்ள உதவி செய்கிறது. அது அளவு, இடம், அமைப்பு ஆகியவற்றைப் பற்றிய விஞ்ஞானம். மேலும் அது கருதுகோள்களை சரிபார்க்கும் ஒரு வழிமுறை ஆராயக் கூடிய விஷயத்திற்கு மறுக்க முடியாத நிரூபணங்களை கணக்கியலில் கொடுக்க முடியும்.

அது இவ்வுலகின் அடிப்படையாக இருக்கிறது. என்றும் மாறா உண்மைகளாக இருக்கிறது. விஞ்ஞானத்தின் எல்லாத் துறைகளிலும் உதாரணமாக மருத்துவம், வானவியல், இயற்பியல், கட்டுமானம், சமூகம், மனநலம் ஆகிய எல்லாத் துறைகளிலும் கணக்கு உள்ளடங்கி இருக்கிறது.

கணக்கு என்பது முடிவேயில்லாத ஓர் விஞ்ஞானம். அதன் நோக்கம் முடிவு தெரியாத ஒன்றை தெரிந்தவற்றுடன் இணைத்து ஒரு முடிவுக்கு வருவதாகும்.

இவ்விதமாக கணக்கு இப்பொழுது மனிதனுக்கும். இறைவனுக்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துகிறது.

இது விஞ்ஞானம் மற்றும் காரணங்களின் யுகம். அறிவுடைய ஒரு மனிதனுக்கு கடவுள் இருப்பதையோ, அல்லது எந்த ஒரு மதத்தின் தெய்வீக மூலத்தையோ காரணங்கள் அறிந்து கொள்ளாமல் குருட்டு நம்பிக்கை மட்டும் கொள்வது என்பது இயலாத ஒன்றாகும். கடவுள் நம்மிடம் ஏதாகினும் கூறவேண்டியது இருந்தால் அவர் கூறும்பொழுது அவரிடமிருந்து ஒரு ஆதாரத்தையும் நாம் பெறவேண்டும். அவர் அனைத்தையும் அறிந்தவராகவும், ஆற்றலுடையோராகவும் இருப்பதால் அவரால் நமக்கு தேவையான ஆதாரங்களை தாராளமாக தர இயலும்.

இறக்கப்பட்ட மொழியிலேயே பாதுகாக்கப்பட்டிருக்கும். ஒரே வேதம் இறுதி வேதமான அல்குர் ஆன் ஆகும். இஸ்ரவேலர்களின் நபிமார்களுக்கு கொடுக்கப்பட்ட தவ்றாத் தொலைந்து போனதும், கிறித்துவர்கள் வைத்திருக்கும் இன்ஜீல் கிறித்துவர்களுடையதுதானே அன்றி இயேசுவுடையது அல்ல என்பதும் நமக்கு தெரிந்த ஒன்றாகும். மேலும் இந்துக்கள். புத்தர்கள் ஆகியவர்களின் வேதங்களின் மூலப் பிரதிகள் இல்லை என்பதும் நமக்கு தெரிந்த ஒன்றே.

அவர்களிடம் இருப்பதெல்லாம் வேதத்தை அறிந்தவர்கள் என்று கூறப்படுபவர்களால் எழுதப்பட்ட புத்தகங்களே.

இறுதிவேதம், 1970-ல் கணிணியில் புகுத்தப்பட்டது. அதன்மூலம் வேறு எந்த புத்தகத்திலும் காணப்படாத ஓர் அற்புத அமைப்பு கண்டுபிடிக்கப்பட்டது. அது இவ்வேதம் மூலமொழியில் எழுதப்படும்போதே ஒரு அற்புதமான. நுணுக்கமான கணக்கியல் அமைப்புக்கு ஏற்ப எழுதப்பட்டது என்பதற்கு மறுக்கமுடியாத ஆதாரங்கள்

வந்து கொண்டிருக்கின்றன. இதைத் தொடர்ந்த ஆராய்ச்சியில் இறுதி வேதத்தின் எல்லா விஷயங்களும். அத்தியாயங்கள், வசனங்கள். வார்த்தைகள் குறிப்பிடப்பட்ட சில எழுத்துக்கள். இறைவனின் பெயர்களின் தன்மைகள் மற்றும் எண்ணிக்கைகளும் இன்னும் பல விஷயங்களும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஓர் அற்புதமான அமைப்பில் அமைக்கப்பட்டிருப்பதை காணலாம். இத்தகைய ஒரு முழுமையான கணக்கியல் குறியீடு இருப்பதால் அந்த அமைப்பில் எந்த ஒரு சிறு மாற்றம் செய்தாலும் உடனடியாக வெளிப்படுத்தி காண்பிக்கப்படும்.

மேலும் இந்த அற்புத அமைப்பு இவ்வேதம் இறைவனிடமிருந்து வந்தது. என்பதையும் ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கின்றது. ஏனெனில் எண்கள் பொய் சொல்வதில்லை.

இவ்விதமாக கணக்கு மனிதர்கள் அறிந்த அற்புதங்களிலேயே மிகப்பெரிய ஒன்றை நமக்கு காட்டுவதுடன் மட்டும் அல்லாமல் இறைவன் இருப்பதையும் அவரிடமிருந்து ஒரு வேதம் வந்திருப்பதையும் அணுவளவும் சந்தேகமில்லாமல் நிரூபிக்கிறது.

மகத்தான அற்புதங்களில் ஒன்று (74:35) மனித சரித்திரத்தில் முதல் முறையாக இறைவனிடமிருந்து வந்தது என்பதற்கான ஆதாரங்களை தனக்குள்ளேயே கொண்டதாக ஒரு வேதம் நம்மிடத்தில் இருக்கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு கணித, அமைப்பு கொண்டதாக இருக்கிறது. குர்ஆனைப் போலவே இக்கணித அமைப்பு தெளிவாகவும், இலகுவாகவும், புரியக்கூடியதாகவும், சிந்தனை. அறிவு தேவைப்படக் கூடிய அளவுக்கு நுணுக்கமானதாகவும் இருக்கிறது.

இலகுவாக புரியக்கூடிய உண்மைகளை எந்த ஒரு கருவியும் இல்லாமல் புரிந்து கொள்ள முடியும். நுணுக்கமான உண்மைகளை புரிந்து கொள்ள கால்குலேட்டரோ, கம்ப்யூட்டரோ தேவைப்படும். கீழே கொடுக்கப்பட்டிருக்கும் உண்மைகள் எந்த கருவிகளும் இல்லாமல் அறிந்து கொள்ளக் கூடியதே. இவை அனைத்து உண்மைகளும் அரபி மூலத்தில் உள்ளவையாகும் என்பதை நினைவூட்ட விரும்புகிறோம்.

1. குர்ஆனின் முதல் வசனமான பிஸ்மில்லாஹ் 19 அரபு எழுத்துக்கள் கொண்டதாக இருக்கிறது!

2. குர்ஆனில் 114 அத்தியாயங்கள் உள்ளன. 114= 6 x 19

3. குர்ஆனின் மொத்த வசனங்கள் 6346 = 334 x 19 (6234 எண் இடப்பட்ட வசனங்கள். + 112 எண் இல்லாத வசனங்கள் (பிஸ்மில்லாஹ்)) (6234 + 112 = 6346, 6+3+4+6 = 19)

4. குர்ஆனில் "பிஸ்மில்லாஹ்" |14 முறை உள்ளது. 9வது அத்தியாயத்தில் "பிஸ்மி" இல்லை என்றாலும் 27வது அத்தியாயத்தில் 2 முறை உள்ளது. 114=6 X 19

5. 9வது சூராவில் "பிஸ்மில்லாஹ்" இல்லை . 27வது அத்தியாயத்தில் '2' முறை உள்ளது. 9 முதல் 27 வரை உள்ள அத்தியாயங்கள் (9ம் 27ம் உட்பட) 19 அத்தியாயங்கள் ஆகும்

6. "9' முதல் 27 வரை உள்ள அத்தியாயங்களின் எண்களை கூட்டினால் (9+10+II+.......+27) = 342 = 18 x 19

7. இது ஒரு கணக்கியல் விதி அதாவது தொடர்ந்து 19 எண்களை கூட்டினால் வரும் கூட்டுத் தொகை 19 ஆல் வகுபடக் கூடியதாகவே இருக்கும். ஆனால் இதில் அற்புதமான விஷயம் என்னவென்றால் 27வது சூராவில் உள்ள 2 பிஸ்மிக்கு இடையில் உள்ள வார்த்தைகள் 342 = 18 x 19 இரண்டாவது “பிஸ்மி” 27வது அத்தியாயத்தில் 30வது வசனத்தில் உள்ளது 27+30=57= 3 x 19

8. புகழ்பெற்ற முதல் வஹீ 96 (1 to 5 வசனங்கள்) 19 வார்த்தைகள் கொண்டது.

9. 19 வார்த்தைகள் கொண்ட இந்த முதல் வஹியில் 76 எழுத்துக்கள், உள்ளன. 76 = 4 x 19

10. இறக்கப்பட்ட வரிசையில் முதல் அத்தியாயத்தின் வசனங்கள் 19

11. இறக்கப்பட்ட வரிசையின் முதல் அத்தியாயத்தில் (அத் 96) மொத்த எழுத்துக்கள் 285 = 15 x 19

12. இறுதியாக இறங்கிய அத்தியாயத்தின் (அத் 110) வார்த்தைகள் - 19

13. இறுதியாக இறங்கிய அத்தியாத்தில் முதல் வசனத்தின் எழுத்துக்கள் - 19

14.இரண்டாவது இறங்கிய வஹி (68வது அத். முதல் 9 வசனங்கள்)யின் வார்த்தைகள் 38 = 2 x 19

15. மூன்றாவது வஹீயின் (73வது அத். முதல் 10 வசனங்கள்) வார்த்தைகள் 57 = 3 x 19

16. "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" என்ற வாசகத்தின் 4 வார்த்தைகளான 1. இஸ்மு, 2. அல்லாஹ். 3. அர்ரஹ்மான். 4 அர்ரஹீம் ஆகியவை முழுக் குர்ஆனிலும் 19 ஆல் வகுபடக் கூடியதாக இருக்கிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | இஸ்மு | 19 |
| கடவுள் | அல்லாஹ் | 2698 |
| மிக்க அருளாளர் | அர்ரஹ்மான் | 57 |
| மிக்க அன்பாளர் | அர்ரஹீம் | 114 |

17. குர்ஆன் எனும் வார்த்தை குர்ஆனில் 58 முறை இடம் பெற்று உள்ளது. 58 என்ற எண் 19 ஆல் வகுபடவில்லை இதில் அற்புதம் என்னவென்றால் அவற்றில் ஒன்றான 10:15 வசனத்தில் வரும் குர்ஆன் எனும் வார்த்தை "இது அல்லாத குர்ஆன்" என்று வருகிறது (கைஃரி ஹாதல் குர்ஆன்) ஆக குர்ஆன்" எனும் வார்த்தை 57 முறை உள்ளது. 57 = 3 X 19

18. குர்ஆனில் 30 வெவ்வேறு எண்க ள் குறிப்பிடப்படுகிறது. 1. 2. 3. 4. 5. 6, 7. 8, 9, 10. II. 12, 19, 20, 30, 40, 50, 60, 70, 80. 99. 100. 200. 300, 1000, 2000, 3000. 5000, 50000 & I00000 இந்த எண்க ளின் கூட்டுத் தொகை 162146 = 8534 X 19.

19. குர்ஆனில் முதல் அத்தியாயம் அல்ஃபாத்திஹாவை ஓதினால் உதடுகள் 19 முறை தொட்டுக் கொள்ளும் (அரபி எழுத்துக்களில் -ப மற்றும் - ம ஆகிய இரண்டு எழுத்துக்கள் மட்டுமே உதடுகள் ஒன்றையொன்று ஒட்டிக்கொள்ளும். இதில் - 15, - 4 = 19.

முன்னர் குறிப்பிட்டபடி முத்திரை எழுத்துக்களுக்கான விளக்கத்தை அல்லாஹ் இதுவரை எவருக்கும் அறிவிக்கவில்லை. Dr. ரஷாத் கலீபாவின் தொடர்ந்த ஆராய்ச்சியில் அல்லாஹ் முத்திரை எழுத்துக்களுக்கான விளக்கத்தையும் உலகுக்கு வெளிப்படுத்தினார்.

★★★

# ஹதீஸ்களை பின்பற்றுபவர்களுக்கு கடும் எச்சரிக்கை

மூஸா

முகம்மது நபியின் பெயரால் இட்டுக்கட்டடப்பட்ட செய்திகளை சரித்திர நிகழ்ச்சியாக எடுத்துக் கொள்ளாமல் மார்க்க ஆதாரமாகவும் தீர்ப்பு கூறுவதற்கும் பயன்படுத்தி ஆதத்தின் வழித்தோன்றல்களுக்கு இடையே குரோதத்தையும் விரோதத்தையும் வளர்த்து வருகிறார்கள் பலர்.

இப்பூவுலக வாழ்வில் குர்ஆனை கொண்டு நேர்வழி பெறாதவர்களுக்கும் அவர்களின் கொள்கைகளை பின்பற்றுபவர்களுக்கும் ஏற்படப்போகும் கதியைப் பற்றி இறைவன் குர்ஆனிலே தெளிவாக எச்சரிப்பதை தயவு செய்து சிந்தித்து தவறுகளை சரி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

குர்ஆனிலே கடவுள் கூறுகிறார்.

ஆதமுடைய வழித் தோன்றல்களை நிச்சயமாக நாம் கண்ணியப்படுத்தியுள்ளோம். தரையிலும் கடலிலும் நாம் சுமந்து செல்கிறோம். இன்னும் நல்லவற்றிலிருந்து அவர்களுக்கு உணவளித்து நாம் படைத்தவற்றில் மிகுதமானதைவிட அவர்களைப் பெரிதும் மேன்மையாக்கி வைத்துள்ளோம். 17:70

குர்ஆனை கொண்டு நேர்வழி பெறாத முஸ்லிம்கள் ஆதமுடைய வழித் தோன்றல்களான இதர சமூகங்களை சேர்ந்த மக்களை (கடவுளுக்கு மட்டும் சரணடைந்தோர்) கடவுள் கண்ணியப்படுத்தி இருப்பதை சிந்தித்து பார்ப்பது இல்லை.

ஆனால் அந்த சமுதாயங்களை சேர்ந்தவர்கள் கண்டுபிடித்த நவீன விஞ்ஞான சாதனங்களை எல்லாம் வாழ்க்கையில் கொண்டு வந்து அவர்கள் விளைவித்த உணவுப் பொருட்கள் எல்லாம் உண்டு மகிழ்வார்கள்.

நன்றிக்கடனை குர் ஆனை கொண்டு தெளிவு பெறாதவர்கள் வெளிப்படுத்துவதை பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும். வெள்ளிக்கிழமை நடைபெறும் ஒவ்வொரு குத்பா பிரசங்கத்திலும் ஆதத்தின் வழித்தோன்றல்களுக்கு எதிராக சாபமிடுவார்கள். இதோ

'அல்லாஹும்ம அஹிஸ்ஸல் இஸ்லாம் வல்முஸ்லிமீன் வஅஜில்லிஷ்ஷிர்க்க வல்முஷ்ரிகீன் : வந்நசாராவல் யஹூதீய்யீன்.

இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் கிறிஸ்துவர்களையும் யூதர்களையும் இவர்கள் புரிந்து கொண்ட இலட்ஷணம் எவ்வளவு மோசமானது.

குர்ஆனைக் கொண்டு நேர்வழி பெறாதவர்கள் இந்த சமூகங்களை வர்ணித்ததற்கு எதிராக அல்லாஹ் எவ்வளவு கண்ணியமாக இவர்களை நேசிக்கிறார் என்பதை குர்ஆன் 5 : 69 2:62 உணர்த்துகிறது.

"நிச்சயமாக விசுவாசிகள் (தூதர் மீது அருளப்பட்ட குர்ஆனின் படி நடப்பவர்கள்) யூதர்கள். கிறிஸ்தவர்கள் மற்றும் ஸாபியீன்கள் (இந்துக்கள்) ஆகியோரில் யார் இறைவன் மீதும் இறுதி தீர்ப்பு நாளின் மீதும் நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிகிறார்களோ அவர்களுக்கு அவர்களுடைய கூலி நிச்சயமாக அவர்களுடைய இறைவனிடத்தில் உண்டு. மேலும் அவர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை. அவர்கள் துயரப்படவும் மாட்டார்கள்"

குர்ஆனை கொண்டு நேர்வழி பெறாதவர்கள் பெரும்பாலான குத்பா பிரசங்கத்தில் நபியை எவ்வாறு நினைவு கூறுகிறார்கள் என்பதை கேட்டால் அதிர்ச்சியாக இருக்கும். இதோ அவர்கள் கூறுகிறார்கள்.

'ஆதம் நபியிலிருந்து ஈசா நபி வரை ஒவ்வொரு நபிமாருடைய தூதருடைய பெயரை ஒவ்வொன்றாக சொல்லி அவர்கள் எல்லாம் அந்நாளில் இறைவனுடைய சபையிலே யா நப்ஸி. யா நப்ஸி என்று புலம்பிக் கொண்டு இருப்பார்களாம். முகம்மது நபிமட்டும் பெயரைக் குறிப்பிடும் போது மட்டும் கடவுள் அவருக்கு வழங்காத துதிச் சொற்களையெல்லாம் அவருக்கு அளித்து (அவர்) அந்நாளில் யா உம்மத்தி, யா உம்மத்தி என்று உம்மத்துக்காக வாதாடுவார்களாம்.

2:285 வசனத்தை இவர்களிடம் சுட்டிக்காட்டினால் அதற்கு இவர்கள் இந்த வசனம் சில தூதர்களை நிராகரிப்பிலிருந்து நம்மை தடுக்கிறது என்றும் அவர்களை வரிசைப்படுத்துவதையோ தரம் பிரிப்பதையோ அல்ல என்று அடித்து கூறுவார்கள்.

தூதர்களுக்கு இடையே வேற்றுமை காட்டக்கூடாது என்று 2:285-ல் வரும் இறைக் கட்டளைக்கு மாற்றமாக தூதர்களை வரிசைப்படுத்துவதோடு நில்லாமல் முகம்மது நபியைத் தவிர அனைத்து நபிமார்களும் தூதர்களும் யா நப்ஸி யா நப்ஸி என்று கதறுவதாகவும் முகம்மது நபி மட்டும் யா உம்மத்தி யா உம்மத்தி என்று வாதாடுவதாக தரம் பிரித்து விட்டார்கள்.

இந்த உலகத்திலேயே தூதர்களுக்கு இடையே வேற்றுமை பாராட்டுவதற்கு அதிகாரம் அளிக்கப்படாத பட்சத்தில் மறுமையில் அவர்களின் நிலையை கணித்து சொல்ல சாத்தானை தவிர வேறு யார் அதிகாரம் கொடுத்து இருப்பார்கள் என்பதை சிந்தித்து பார்க்கட்டும்.

குர்ஆனில் 17:73, 74, 75 ஆகிய வசனங்களில் முகம்மது நபியை நோக்கி கடவுள் கூறுகிறார். இதோ

“உம்மீது நாம் வஹியாக அறிவித்ததை விட்டு அது அல்லாதவற்றை நம்மீது நீர் இட்டுக்கட்டிச் சொல்லும்படி உம்மை திசை திருப்பிட நிச்சயமாக அவர்கள் முயன்றனர். (நீர் அப்படிச் செய்வீராயின்) அப்பொழுது உம்மை அவர்கள் நண்பர்களாக ஆக்கி கொண்டிருப்பார்கள்”

"உம்மை நாம் உறுதிப்படுத்தி வைத்திருக்காவிட்டால் நீர் அவர்களின் பக்கம் கொஞ்சமேனும் நிச்சயமாக சாய்ந்திருக்க கூடும்"

'அப்பொழுது (அவ்வாறு சாய்ந்திருந்தால்) உலக வாழ்வில் இரட்டிப்பை (வேதனை)யும் மரணத்தில் இரட்டிப்பை (வேதனை)யும் உம்மை சுவைக்கச் செய்திருப்போம். நமக்கு எதிராக எந்த உதவியாளரையும் நீர் கண்டிருக்க மாட்டீர்”

மேற்கண்ட வசனத்தில் முகம்மது நபி மக்கள் மத்தியில் வாழ்ந்து வந்த காலத்திலேயே குர்ஆன் அல்லாத செய்திகளை நபியின் பெயரால் இட்டுக்கட்ட பகிரங்க முயற்சி நடந்ததையும் அதனை தோல்வியடையச் செய்து தனது அருளால் நபியை - அப்பழியிலிருந்து காப்பாற்றுவதையும் தெள்ளத் தெளிவாக கடவுள் விவரிக்கிறார்”.

இதனால் நபியின் காலத்தில் செய்ய முடியாததை நபியின் மறைவுக்கு பல வருடங்களுக்கு பிறகு குர் ஆனை கொண்டு திருப்தியடையாதவர்கள் ஹதீஸ்களை

உருவாக்கிவிட்டார்கள். மேலும் ஹதீஸ் தொகுப்புகளை சரித்திர சம்பவமாக நினைக்காமல் மார்க்க ஆதாரமாக பின்பற்ற ஆரம்பித்து விட்டார்கள்.

குர்ஆன் மட்டும் போதும் என்ற கொள்கையை ஏற்றுக் கொள்ளாதவர்களை தூதர் அந்நாளில் எவ்வாறு நிராகரித்து விடுவார் என்ற எச்சரிக்கையை பார்ப்போம்.

இறைவன் கூறுகிறார்.

“ஒவ்வொரு மனிதடையும் அவரவருடைய தலைவருடன் நாம் அழைக்கும் நாளில் எவருடைய செயலேடு அவரது வலக்கரத்தில் கொடுக்கப்பட்டதோ அத்தகையோர் தம் செயலேட்டை (மகிழ்ச்சியுடன்) படிப்பார்கள். ஓர் இம்மியளவும் அவர்கள் அநியாயம் செய்யப்பட மாட்டார்கள்."

"எவர் இதில் (குர்ஆனைக் கொண்டு இவ்வுலகில் நேர்வழியை விட்டும் அகக்) குருடராக இருந்தாரோ அவர் மறுமையிலும் குருடராக இருப்பார். இன்னும் பாதையில் மிகத் தவறியவராவார்.” (17:71,72)

அந்நாளில் குர்ஆனை கொண்டு நேர்வழி பெறாதவர்கள் நபியை பார்த்து என்ன கூறுவார்கள் என்று கற்பனை செய்து பார்ப்போம். அல்லாஹ் மன்னிப்பாராக!

நபியே! உம்நாமத்தைக் கொண்டு பூவுலகில் துதித்து புகழ்ந்து பேசிக்கொண்டு இருக்கவில்லையா? தொழுகைக்கான அழைப்பிலும் தொழுகையிலும் எந்த இறைத் தூதருக்கும் சாட்சி கூறாமல் உம்மை மேன்மைப்படுத்த உமக்கு சாட்சி பிரமாணம் கூறவில்லையா? பிரார்த்தனையின் ஆரம்பத்திலும் முடிவிலும் உம்மீது ஸலவாத்து சொல்லித்தானே இறைவனிடம் பிரார்த்தனை செய்வோம்! உம்மீது ஸலவாத்து ஓதியல்லவா எந்த காரியத்தையும் செய்வோம்! நேரம் கிடைக்கும்போதெல்லாம் உம்மீது ஸலவாத்து சொல்லவில்லையா? ஸலவாத்து ஓதி பேய் பிசாசு பில்லி சூனியம் காற்று கருப்பு இவைகளையெல்லாம் விரட்டினோமே!

மேலும் உமது வழிமுறை என்பதற்காக தலைக்கு தலைப்பாகை அல்லது தொப்பி அணிந்து தாடி வளர்த்து ஜிப்பா போட்டு கம்பீரமாக வாழவில்லையா?

எங்கள் குலப் பெண்களையும் தலைமுதல் கால்வரை கருப்பு உடை தரிக்கச் செய்து அழகு பார்க்கவில்லையா? என்று என்னென்ன கூறமுடியுமோ அதனை கூறுவார்கள் என்று நினைத்து கொள்வோம்.

குர்ஆனில் அத்தியாயம் 25ல் வசனம் 26முதல் 30வரை உள்ளதை இவர்கள் சீர்தூக்கி பார்க்கட்டும்.

'அந்நாளில் உண்மையான ஆட்சியதிகாரம் கருணைமிக்க இறைவனுக்கே உரியதாக இருக்கும். மேலும் நிராகரிப்பாளர்களுக்கு மிகக் கடினமான நாளாக இருக்கும். மேலும் அந்நாளில் கொடுமை புரிந்த மனிதன் தன்னுடைய கைகளைக் கடித்தபடி கூறுவான் : "தூதருடைய வழியில் (குர்ஆனை மட்டும் பின்பற்றுவதில்) என்னை ஆக்கிக் கொண்டேன் இல்லையே? ஐயகோ! எனது துர்பாக்கியமே! நான் இன்னவனை நண்பனாக்காமல் இருந்திருக்க வேண்டுமே! என்னிடம் வந்த நினைவூட்டலை (குர்ஆனை மட்டும் ஏற்று நடப்பதை விட்டும்) ஏற்காமல் நான் அவனுடைய வழிகேட்டுக்கு பலியாகி இருந்து விட்டேனே" (என்றும் கூறுவான்) - ஷைத்தான் மனிதனை ஏமாற்றக் கூடியவன் என்று நிரூபணமாகிவிட்டது."

(அந்நாளில்) தூதர் கூறுவார் : என்னுடைய இரட்சகரே! என்னுடைய சமூகத்தினர் நிச்சயமாக இந்த குர் ஆனை முழுமையானது. தெளிவானது. விவரிக்கப்பட்டது என்பதை ஏற்றுக் கொள்ளாமல் நகைப்புக்குரியதாக ஆக்கி கொண்டார்கள்"

நேர்வழி பெற குர்ஆன் மட்டும் தான் என்ற சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாமல் ஹதீஸ்களுக்கு வக்காலத்து வாங்குபவர்கள் இறைவனின் கடும் எச்சரிக்கையையும் புறக்கணிப்பார்களேயானால் அது மாபெரும் சோகம்தான்.

'அறிவுடையோர் ஏற்கட்டும். நெறியறியார் தூற்றட்டும் எதுவரினும் இறைநெறியை எடுத்துரைப்பது எமது கடன்"

'புகழனைத்தும் கடவுளுக்கே'

★★★

இறைவன் வாக்களித்த இம்மை மறுமை அருட்கொடைகளை அடையத் துணியாத

# போலி முஸ்லிம்கள்

-மூஸா

உலக மக்கள் யாவருக்கும் இறுதிநாள் வரை நேர்வழிகாட்டுவதற்காக இறைவனால் இறுதியாக அருளப்பட்டது குர்ஆன் ஆகும். முகம்மது நபி மீது உலக மக்களுக்காக அருளப்பட்ட திருகுர் ஆனை முகம்மது நபி முதலில் தன்னுடைய வாழ்வில் கடைப்பிடித்து தூதுச் செய்தியை இறை நாட்டப்படி மக்களுக்கு சொல்லி இவ்வுலகத்தை விட்டு சென்றார்கள்.

நபி மறைந்து பல வருடங்களுக்கு பிறகு நபியின் பெயரால் இட்டுக்கட்டி பகுத்தறிவுக்கு ஒத்து வராததையும் ஒன்றுக் கொன்று முரண்பாடான செய்திகளையும் ஆயிரக்கணக்கில் எழுதி ஹதீஸ் என்ற பெயரால் மக்களை வழிகெடுக்க ஆரம்பித்தார்கள் குர்ஆனின் விரோதிகள்.

அதன்படி ஒவ்வொரு கூட்டத்தாரும் தங்கள் மன இச்சைக்கு ஏற்ற ஹதீஸ் தொகுப்புகளை ஞானப் பொக்கிஷமாக எண்ணிக் கொண்டு அதனடிப்படையில் இறைவசனங்களுக்கு அர்த்தம் (அனர்த்தம்) கற்பித்து அதைக் கொண்டு திருப்தியடைந்து பல்வேறு கொள்கையுடையவர்களாக பிரிந்து விட்டார்கள்.

குர்ஆன் வலியுறுத்தாத விஷயங்களை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி குர்ஆன் வலியுறுத்திய ஒற்றுமையை மக்களிடையே வளர்ப்பதற்கு பதிலாக மார்க்கத்தில் குரோதத்தையும் விரோதத்தையும் விதைத்து குர்ஆன் காட்டிய நேர்வழியை விட்டு மக்களை பிரித்து விட்டார்கள்.

மேலும் இவர்களின் இந்த செயல்களால் இறைவனின் தூய மார்க்கத்தை விளங்கி ஏற்றுக் கொள்ள வரும் மக்கள் இறைவனின் நேர்வழியை விட்டும் திசை திருப்பப்படுகிறார்கள்.

இத்தகைய குர்ஆனுக்கு விரோதமான நடைமுறைகளால் இவர்கள் இறைவன் வாக்களித்த அருட்கொடைகளை அரசியல் பொருளாதார சமூக ரீதியாக இழந்து

இவ்வுலகில் இழிவுக்குள்ளாவதோடு அதைவிட முக்கியமான பேரிழப்பை இவ்வுலக வாழ்க்கைக்கு பிறகு அடையப்போகின்ற துர்பாக்கியவான்களின் பட்டியலில் முன்பதிவு செய்து கொண்டார்கள்.

ஒற்றுமை நேர்மை, வாய்மை போன்ற நற்குணங்களுக்கு பதிலாக வேற்றுமை அறியாமை. மூடத்தனம் ஆகியவற்றை பின்பற்றும் போலி முஸ்லிம்களை குர்ஆனின் ஒளியில் பார்க்கலாம்.

1. சாட்சி பிரமாணத்தில் வேற்றுமை :

ஆதம் முதல் உலகத்தில் தோன்றிய அனைத்து நபிமார்களுக்கும் தூதர்களுக்கும் கடவுள் நேர்வழியை போதித்து அவர்கள் மூலமாக அவர்கள் சமுதாயத்திற்கு போதிக்கச் சொன்ன அடிப்படையான சத்திய வார்த்தை கடவுளைத் தவிர வேறு கடவுள் இல்லை" என்ற சாட்சி பிரமாணம் தான்.

தங்கள் வாழ்க்கையை கடவுள் காட்டிய நேர்வழியில் அமைத்துக் கொண்ட நல்லடியார்களின் சரியான சாட்சி பிரமாணம் "கடவுளைத் தவிர வேறு கடவுள், யாருமில்லை என்ற சாட்சி பிரமாணம்தான். இதனை அவர்கள் முழு சிந்தையுடனும் முழு ஆத்மாவுடனும் முழு பலத்துடனும் மொழிந்து அதன்படி செயலாற்றுவார்கள்.

ஒவ்வொரு நபியும் தூதரும் நடைமுறைப்படுத்திவிட்டு சென்ற இந்த பரிசுத்த சாட்சி பிரமாணத்தை அவர்களுடைய சமுதாயத்தில் பெரும்பான்மையானவர்கள் - சிதைத்து விட்டார்கள்.

அந்த வரிசையில் இறுதியாக முகம்மது நபி இறைவனின் அருளால். தமது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திவிட்டு சென்ற “லாஇலாஹ இல்லல்லாஹு” என்ற பரிசுத்த சாட்சி பிரமாணத்தை முகம்மது நபி இறந்தபிறகு அவர் மீதுள்ள பாசத்தாலும் நேசத்தாலும் ஈர்க்கப்பட்ட அரபு சமூகத்தினர் தூதரையும் இறைவனைப்போல நினைவு கூறிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற சாத்தானின் போதனைக்கு கட்டுப்பட்டு பரிசுத்த சாட்சி பிரமாணத்துடன் முகம்மதுர் ரசூலுல்லாஹ் என்பதை இணைத்து சிதைத்து விட்டார்கள். மேலும் விசுவாசிகளை அல்லாஹ் இவ்வாறு கூறும்படி சொன்னதை அவர்கள் மனத்தளவில் ஏற்கவில்லை.

"நீங்கள் கூறுங்கள். அல்லாஹ் கடவுளையும். எங்களுக்கு இறக்கி அருளப்பட்டதையும் மேலும் இப்றாஹிம். இஸ்மாயில் இஸ்ஹாக். யஃகூபு ஆகியோருக்கும். யஃகூப்பின் சந்ததியினருக்கும் அருளப்பட்டதையும் மற்றும் மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் வழங்கப்பட்டதையும் மற்றும் நபிமார்கள் அனைவருக்கும் அவர்களின் இறைவனிடமிருந்து வழங்கப்பட்டவை அனைத்தையும் நாங்கள் நம்புகிறோம். நாங்கள் அவர்களில் யாருக்கு இடையேயும் எந்த வேற்றுமையும் பாராட்டுவதில்லை. இன்னும் நாங்கள் அவனுக்கே கீழ்படிந்த சரணந்தவர்களாக இருக்கிறோம்.

மேற்கண்ட இறைக்கட்டளைக்கு மாற்றமாக போலி முஸ்லிம்கள் இறந்துவிட்ட தூதர்களில் தூதர் முகம்மதுக்கு மட்டும் பொய் சாட்சி பிரமாணம் கூறிக்கொண்டு இருக்கிறார்கள்.

மேலும் இத்தகைய போலி முஸ்லிம்களிடம் "தூதர் முஹம்மது இறந்துவிட்டார். ஆனால், அவருக்கு இறைவனால் வழங்கப்பட்ட தூதுச் செய்தி இறைவனின் பேரருளால் பாதுகாக்கப்பட்டு உயிருள்ள தூதராக குர் ஆன் இருந்து கொண்டு இருக்கிறது. இறைவனின் இல்லத்துக்கு இறைவனை வழிபடுவதற்கு தொழுகைக்காக மக்களை அழைக்கும்போது இறந்துவிட்ட இறைத்தூதர்களில் தூதர் முஹம்மதை மட்டும் முன்னிலைப்படுத்தி சாட்சி கூறும் வார்த்தையை எடுத்துவிட்டால் குர்ஆனுக்கு எவ்வளவு பொருத்தமாக இருக்கும். இதன்மூலம் கடவுளுக்கு மட்டும் அடிபணிந்து வணங்கி இறைத்தூதர்கள் இடையே வேற்றுமை பாராட்டாத நம்பிக்கையாளர்கள் எல்லோருக்கும் மஸ்ஜித்துக்கு (சிரவணக்கம் செய்யும் இடங்கள்) வர அழைப்பு (பாங்கு) விடுவிக்கப்படுவதாக இருக்குமே" என்று விளக்கம் கொடுத்தால் அறிவுள்ளவர்கள் சத்தியத்தை புரிந்து கொள்கிறார்கள்.

ஆனால் இறையில்லங்களில் ஆதிக்கம் செலுத்தும் இணைவைப்பாளர்கள் கொதித்து எழுந்து அசத்திய வார்த்தைகளால் அர்ச்சனை செய்து, முடிந்தால் கரங்களைக் கொண்டும் கக்கி விடுவார்கள்.

மனிதர்கள் அனைவருக்கும் பொதுவான அழைப்பு கொடுத்து இறையில்லங்களில் இறைவன் பெயர் மட்டும் நினைவு கூறப்படுவதை தடுக்கின்ற சாத்தானிய சேவகர்களை கடவுள் எச்சரிப்பதை பார்ப்போம்.

"(மஸ்ஜிதுகளில்) இறையில்லங்களில் அல்லாஹ்வின் (கடவுளிள்) பெயர் நினைவு கூறப்படுவதை எவன் தடுக்கிறானோ மேலும் அவற்றை பாழாக்க முயற்சிக்கிறானோ அவனை விட கொடிய அக்கிரமக்காரன் யார்? அத்தகையவர்கள் அந்த இறையில்லங்களில் நுழைவதற்கே அருகதை அற்றவர்கள். ஒருவேளை அவர்கள் அங்கே செல்வதாக இருந்தாலும் அச்சம் கொண்டவர்களாகவே இருக்க வேண்டும். அவர்களுக்கு இம்மையிலும் இழிவு உண்டு. மறுமையிலும் பெரும் வேதனையுண்டு. 2:114

மேலும் 72:18ல் "சிரவணக்கம் செய்யும் இடங்கள் அல்லாஹ்வுக்கு (கடவுளுக்கு) மட்டும் உரியவை. அங்கே கடவுளுடன் வேறு எவரையும் நினைவு கூறாதீர்கள்.

இவ்வளவு தெளிவாக இறைவசனங்கள் கூறினாலும் தங்களின் தவறுகளை சீர்படுத்திக் கொள்ளாதவாறு இவர்களை தடுத்தது எது? ஹதீஸ்கள்தானே!

குர்ஆன் மேலும் இவர்களைப் பற்றி கூறுவதை பார்க்கலாம்.

மனிதர்களில் சிலர் அல்லாஹ்வுடன் மற்றவர்களையும் அவருக்கு நிகரானவர்களாய் ஆக்கிக் கொள்கின்றன. மேலும் அல்லாஹ்வை எவ்வாறு நேசிக்க வேண்டுமோ. அதுபோல அவர்களையும் நேசிக்கிறார்கள். ஆனால் நம்பிக்கையாளர்களோ அனைவரையும் விட கடவுள் அதிகமாக நேசிப்பார்கள். ஆற்றல் முழுவதும் அல்லாஹ்வின் பிடியில்தான் இருக்கிறது. மேலும் கடவுள் கடுமையாக தண்டனை கொடுப்பவர் என்பதை இந்த அக்கிரமக்காரர்கள் வேதனையை காணும்போது அறியத்தான் போகிறார்கள். அந்தோ அதனை அவர்கள் உணர்ந்து கொண்டால் எத்துணை நன்றாயிருக்கும். 2:165

2. ஆடை அணிவதில் அறியாமை (வேஷத்தன்மை)

கடவுளின் தூதரிடத்தில் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது. கடவுளை அதிகமதிகம் நினைவு கூர்ந்து கடவுளையும் இறுதிநாளையும் எதிர்பார்த்து ஆதரவு 'வைத்தவர்களுக்கு (33:21) என்ற குர்ஆன் வசனத்தை அதன் கோர்வையிலிருந்து துண்டித்து அந்த வசனத்தை தனிநபர் மற்றும் கலாச்சாரத்திற்கு முன் மாதிரியாக புரிந்து கொண்டு பூரிப்படைவார்கள்.

வெள்ளை நிற ஆடை அணிவதையும் தலைப்பாகை அணிவதையும் தாடி வளர்ப்பதையும் புனிதம் என்று கருதச் செய்து மக்களை தரம் பிரிப்பார்கள்.

உண்மையில் இவையெல்லாம் வேறொரு நாட்டின் மத்திய கால அரபு மக்களின் (விசுவாசிகள். இணைவைப்பவர்கள். நிராகரிப்பவர்கள்) கலாச்சாரமும் நடைமுறையுமாகும் என்பதை பொய்யர்கள் மறைத்து விடுவார்கள்.

மனிதன் பிறந்தது முதல் வாழ்ந்து மரணித்து அடக்கப் படும்வரை இயற்கையை ஒட்டிய நற்செயல்களுக்கு அதாவது பல்துலக்குவது நகம் வெட்டுவது. குளிப்பது சுருமா இடுவது போன்ற எண்ணற்ற செயல்களை சடங்காக்கி நபியின் வாழ்வுக்கு முன்மாதிரியாக்கி ஒவ்வொரு செயலுக்கும் நன்மைகளையும் பலன்களையும் எண்ணிக்கை ரீதியில் நபியின் பெயரால் அள்ளி வீசுவார்கள். (முகம்மது நபியை இவர்கள் முன் மாதிரியாக கொள்ளும் இலட்சணத்தை வாசகர்கள் கவனிக்கவும்)

ஜெயில் தண்டனை பெற்ற கைதிக்குகூட சிறைக்குள்தான் சீருடை கட்டாயமாக்கப்படுகிறது. சிறையை விட்டு வெளியேறியவுடன் அவமானச் சின்னமும் கழற்றப்பட்டு விடுகிறது.

மனநலக் காப்பகத்தில் சிகிச்சை பெறும் (Mental Hospital) மன நோயாளிக்கு அங்கு இருக்கும் வரைதான் சீருடை அணிவிக்கப்படுகிறது. குணமடைந்து வெளியேறி விட்டால் சீருடை அணிவிக்கப்படுவதில்லை.

சீருடை அணிந்து ஆனால் சிறைக் கைதி மனநோயாளி ஆகியோரைவிட (அஞ்ஞான கூடத்தில்) ஹதீஸ்களை பல வருடங்கள் கற்று முடித்தவர்கள். இஸ்லாமிய அறிஞர்கள் என்ற கம்பீரத்துடன் வெளிவருபவர்களோ தங்கள் ஆசிரியர்களால் மனோவசியம் செய்யப்பட்டநிலையினை அறியாமல் மக்கள் மத்தியில் மத்ரஸாவில் போட்ட ஆடைகளை அணிந்து கொண்டு வருவார்கள். ஏனெனில் தங்களுக்கு முன்னால் மனோவசியம் செய்யப்பட்டு மதரஸாக்களில் இருந்து வெளியேறினவர்களை அடையாளம் கண்டு கொள்வதற்காகவும் ஷாத்தானின் கருத்துக்களை இவர்கள் துணை கொண்டு மக்களுக்கு எத்தி வைப்பதற்காகவுமே.

இவர்களிடம் சென்று மக்களோடு மக்களாக இருப்பதால் நேர்த்தியான பரிசுத்தமான மக்கள் வழக்கத்துக்கு மாற்றம் இல்லாத ஆடை அணிந்து தக்வா என்னும் சீருடை சாந்தம் என்னும் சீருடை, மத உணர்வு அற்ற அனைத்து சமூகத்தாரையும் சகோதரர்களாக பாவிக்கும் நீதி என்னும் சீருடையால் அலங்கரித்துக் கொண்டால் நல்ல அழகிய முன் மாதிரியாக இருக்குமே என்று எடுத்துக் கூறினால் பகுத்தறிவுக்கும் ஒவ்வாத வாதங்களை முன்வைப்பதோடு முடிந்தால் தாராளமாக கஞ்சத்தனமில்லாமல் வாழ்த்தி விடுவார்கள்?

அதே நேரத்தில் கஷ்டப்பட்டு அசத்தியத்தை அல்லவா இத்தனை வருடங்கள் கற்பதற்கு செலவிட்டோம் என்று மனம் வருந்தும் மாணவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் குறைந்த பட்சம் தெரிந்திருக்கும் குர்ஆனின் வெளிச்சத்தை தங்கள் சகோதரர்களுக்கும் தாங்கள் தொடர்பு வைத்திருக்கின்ற சகோதர சமுதாயத்தை சேர்ந்த நண்பர்களுக்கும் எடுத்துக் கூறினால் சரியாத பாதையில் தொடர்ந்து செல்லலாம்.

அடுத்து மத நல்லிணக்கத்துக்கு எந்தெந்த அம்சங்கள் எல்லாம்" பயனளிக்ககூடியது என்று கடவுள் தெளிவாக சுட்டிக்காட்டும் வசனங்களை பின்பற்றாமல் புறக்கணித்துவிட்டு வழிகெட்டவர்களும், வழிகெட்டவர்களை பின்பற்றும் வசதி படைத்த வழிகேடர்களும் மதநல்லிணக்கம் என்ற பெயரால் நோன்பு காலங்களிலும் மீலாது விழாக்களிலும் சீர்த்திருத்தம் பண்ணாத சீர்கெட்ட ஆட்சியாளர்களையும் அதிகாரிகளையும் அழைத்து முகமது நபியின் மீது மட்டும் பெருமைகளையும் அருமைகளையும் ஏற்றி புகழச் செய்து பூரிப்படைவார்கள்.

மேலும் நாட்டில் லஞ்ச ஊழலையும். மதுவையும் லாட்டரி போன்ற சூதாட்டத்தையும் விதைத்து பாமர மக்களை அழிவுப்பாதைக்கு அழைத்து செல்லும் ஆட்சியாளர்களில் சீர்கெட்டவர்களை இப்தார் போன்ற நோன்பு திறக்கும் நிகழ்ச்சிகளில் வரவேற்று அவர்கள் தலைக்கு தலைப்பாகையோ குல்லாவையோ அணிவித்து பூரிப்படைந்து மத நல்லிணக்கத்தை (?) பேணி வருவதை பெருமையாக பேசுவார்கள். சொற்ப ஆதாயம் கூட இல்லாத ஏமாற்று பேர்வழிகளிடம் கூட்டணி வைத்து அவர்கள் வேட்டையாடும் வாக்கு வலையில் தாங்களும் விழுந்து மற்றவர்களையும் தள்ளிவிட்டு இழிவடைவார்கள்.

இத்தகைய போலி இஸ்லாமிய அறிஞர்கள் தங்களை பின்பற்றும் மக்களை வஞ்சித்து அவர்களின் பொருள்களை உண்பார்கள். நரகத்தை நோக்கி செல்லும் பாதையை காட்டுவார்கள். உள்ளத்தால் உலக ஆசைவயப்பட்டவர்கள். இவர்களிடமுள்ள ஞானம், மின்னல் வரும்போது தோன்றி மறையும் வெளிச்சத்துக்கு ஒப்பானது. ஹதீஸ்களின் பெயரால் குர்ஆனில் கூறப்படாததை எல்லாம் மக்கள் மீது பாரமாக ஏற்றி அதனை சடங்காக்கி. சடங்கை சம்பிரதாயமாக்கி பலன்களை தேடி செல்வார்கள். உள்ளத்தால் சுகபோகத்தையும் அதிகாரத்தையும் தேடி ஓடும் இவர்கள் குர்ஆனுடைய வார்த்தைகளை கண்ணியப்படுத்தி நடைமுறை வாழ்க்கையில் கொண்டு வராததால் இறுதியில் இறைவனால் இழிவாக்கப்படுகிறார்கள்.

சீரழிந்த நிலையிலுள்ள இவர்கள் இவர்களின் குடும்பத்து பெண்மணிகளையும் இவர்களின் உளரல்களை வேதவாக்காக நம்பி செயல்படுபவர்களின் குடும்ப பெண்மணிகளையும் தலைமுதல் கால்வரை கருப்பு அங்கி கொண்டு மூடும் கலாச்சாரத்தை இஸ்லாத்தின் பெயரால் பயமுறுத்தி ஏற்க செய்து விட்டார்கள்.

பெண்கள் உடையணியும் முறை பற்றி இறைவன் கூறுகையில் “அவர்கள் அவசியமான பகுதிகளைத் தவிர தங்கள் உடம்பின் மற்றப் பகுதிகளை வெளிக்காட்டக்கூடாது என்று வழிகாட்டி தங்கள் மார்புகளை மறைத்து கொள்ள வேண்டும்” என்றும் கட்டளையிடுகிறார்.
அவசியமான பகுதிகள் என்றால் கைகளையும் கால்களையும் தவிர என்று அர்த்தம் தரும் ஹதீஸ் வசனங்களையும் அவசியமான பகுதிகள் என்றால் கைகளும் கால்களும் முகத்தையும் தவிர என்று அர்த்தம் தரும் ஹதீஸ் வசனங்களையும் (இதிலும் முரண்பாடு) மேற்கோள்காட்டி (பாகிஸ்தான், சவூதி அரேபியா, இந்தியா போன்ற நாடுகளில்) இருவிதமான ஹதீஸ்களில் ஏதாவது ஒன்றை தேர்ந்தெடுத்து அதற்கு ஏற்ப முக்காடு போட சொல்வார்கள்.

இறைவன் கட்டளையை மீறாமல் நாம் சார்ந்து வாழும் கலாச்சாரத்தில் கண்ணியமாக பெண்கள் அணிவதற்கு ஏற்ற ஆடைகளை காலத்திற்கும் இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு எவ்வளவோ இருப்பதை ஏற்றுக் கொள்ளாமல் கருப்பு அங்கி கொண்டு தலைமுதல் கால்வரை மூடும் தண்டனை பெண்களுக்கு அளித்து அவர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகவும் சுதந்திர மற்றவர்களாகவும் ஆக்கி பெண்களை அடக்குமுறை செய்யும் மதமாக சித்தரித்து இறைவனுடைய மார்க்கத்தில் வரம்பு மீறி அதனை - மற்றவர்கள் பின்பற்றாதவாறு தடுத்துவிட்டார்கள். அறிவுச்சூரியன்கள்?

இவர்களின் யதார்த்த நிலையை குர்ஆனின் ஒளியில் பைபிளில் பார்க்கலாம்.

இயேசு கூறினார். மாயக்காரராகிய வேத பாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ! வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள். அவைகள் புறம்பே அலங்காரமாய் காணப்படும். உள்ளேயோ மரித்தவர்களுடைய எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும்.

அப்படியே நீங்களும் மனிதருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள். உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள். (மத்தேயு 23:27-28)

3. முடிவு எடுப்பதில் மூடத்தனம்

ஒருவருடைய நல்வாழ்க்கையில் அக்கரையுள்ளவர் ஒரு மணியார்டரையோ அல்லது பரிசுப் பொருளையோ அனுப்புகிறார். அதனை தபால்காரர் கொண்டு வந்து கதவை தட்டி கொடுக்கிறார். பெற்று மகிழ்ச்சியடைந்து அனுப்பியவரை பாராட்டுகிறார்.

மேலும் கொண்டு வந்தவருக்கு நன்றி கூறி ஏதாவது செய்ய விரும்புகிறார். ஆனால் அந்த நல்ல தபால்காரரோ எதனையும் வாங்குவது சட்ட விரோதம். மேலும் அதனை கொடுத்து எனது வேலையை கேவலப்படுத்தாதீர்கள். எனக்கு கொடுக்கப்பட்ட கடமையைத்தானே செய்து கொண்டு இருக்கிறேன். என்னை இந்த வேலைக்கு தேர்ந்தெடுத்த அரசாங்கம் நல்ல சம்பளத்தை தந்து கொண்டு இருக்கிறது என்று கூறி யாரிடமும் இப்படி நடந்து கொள்ள வேண்டாம் என்று மேலும் அறிவுரை கூறி சென்று விடுகிறார்.

பெற்றவர் தனக்கு இதனை அனுப்பியவர் மீது பாசம் கொண்டு அவரைப் பற்றி பலரிடம் பெருமையாகப் பேசி அவரது நெருக்கத்தை மேலும் பெற விரும்புகிறார். (இதை விடுத்து அனுப்பியவருடன் கொண்டு வந்தவரை இணைத்து - எந்த ஒரு சராசரி மனிதனும் நினைவு கூறமாட்டான்)
ஆனால் அதிகம் படித்த இஸ்லாமிய அறிஞர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களோ 'அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹ்' என்று மட்டும் யாராவது சொன்னால் அவரை நிராகரித்து விடு. மாறாக அதனுடன் அஷ்ஹது அன்ன முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்று சேர்த்து சொன்னால் அவரை ஏற்றுக்கொள் என்கின்றனர்

மொத்தத்தில் இவர்கள் தபால்காரருடைய அறிவுரையையும் ஏற்பதில்லை. சராசரி மனிதனைப் போலும் நடந்து கொள்வதில்லை. காரணம் காண்பதெல்லாம் மஞ்சளாகத் தெரியும் காமாலைக்காரனை குணப்படுத்தலாம். கண்களிலுள்ள ஹதீஸ் என்னும் கருப்பு கண்ணாடியை, மாயக்கண்ணாடியை தூக்கி எறியாமல் குர்ஆன் என்னும் சத்தியத்தை பார்ப்பவர்களை குணப்படுத்தவே முடியாது.

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)


# புதிய நினைவூட்டல் மாத இதழ்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி

| செய்தி 2 | ஜுன் 2001 | நினைவு 5 |
|---|---|---|

ஆசிரியர் :
C.S. ரஃபியுத்தீன்

துணை ஆசிரியர் :
N.A. அஹமது ஹுசைன்

தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்


இதழின் உள்ளே


★ உலகப்பொதுமொழிகணிதம்

★ ஹதீஸ்களை பின்பற்றுபவர்களுக்கு கடும் எச்சரிக்கை

★ போலி முஸ்லிம்கள்



ரஷாத் கலிபாவின் ஜும்மா பயான்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும். ரஷாத் கலீபாவின் குர்ஆன் வகுப்பு ஆடியோ தமிழ், ஆங்கிலம், உருது குர்ஆன் ஆடியோ. குர்ஆன் மட்டுமே மார்க்கம் - ஹதீஸ்கள் மார்க்கம் அல்ல என்பது பற்றி தெளிவான குர்ஆன் வசனங்கள் கூடிய ஜும்மா பயான்கள், குர்ஆன் ஹதீஸ் இஸ்லாம் புத்தகம், முஸ்லிம்களுக்கு 19 கேள்விகள் புத்தகம், புதிய நினைவூட்டல் புத்தகங்கள் கிடைக்கும். மிகக் குறைந்த விலையில் ஆங்கிலம், தமிழ், குர்ஆன் Amazon, Flipkart மூலியமாக கிடைக்கும்.www.kadavulmattum.org


தினந்தோறும் அதிகாலை வேளைகளில் படியுங்கள்
குர்ஆன் அது சாட்சியளிக்க கூடியதாக உள்ளது.
படிப்போம் பின்பற்றுவோம் குர்ஆனை மட்டும்.
மீட்சி பெறுவோம் நம்மை படைத்தவரிடம்

# அல்-குர்ஆன் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில மொழி பெயர்ப்பும், அதன் தமிழாக்கமும்

**Sura 2: The Heifet (Al-Baqarah)**

**அத்தியாயம் - 2 : பசுங்கன்று (அல்பகறா)**

*Fasting Emphasized And Modified**

**நோன்பு : வலியுத்துதலும் சிறுமாற்றமும்**

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَۙ

183. O you who believe, fasting is decreed for you, as it was decreed for those before you, that you may attain salvation.

183. நம்பிக்கை கொண்டவர்களே உங்களைத்தான், உங்களுக்கு முன்னிருந்தோர்களுக்கு விதிக்கப்பட்டிருந்தவாறே, உங்களுக்கும் நோன்பிருந்தல் விதிக்கப்படுகின்றது, நீங்கள் மீட்சியை அடையும் பொருட்டு.

اَيَّامًا مَّعْدُوْدٰتٍ فَمَنْ كَانَ مِنْكُمْ مَّرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ وَعَلَى الَّذِيْنَ يُطِيْقُوْنَهٗ فِدْيَةٌ طَعَامُ مِسْكِيْنٍ فَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَهُوَ خَيْرٌ لَّهٗ وَاَنْ تَصُوْمُوْا خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ

184. Specific days (are designated for fasting); if one is ill or traveling, an equal number of other days may be substituted. Those who can fast, but with great difficulty, may substitute feeding one poor person for each day of breaking the fast. If one volunteers (more righteous works), it is better. But fasting is the best for you, if you only knew.

184. குறிப்பிடப்பட்ட நாட்கள் (நோன்பிருத்தலுக்கென நியமிக்கப் பட்டுள்ளன); ஒருவர் நோயிலோ அல்லது பிரயாணத்திலோ இருந்தால், ஒரு சமமான எண்ணிக்கையுள்ள மற்ற நாட்களைக் கொண்டு பகரமாக்கிக் கொள்ளலாம். மிகுந்த சிரமத்துடனேயே அன்றி, நோன்பிருக்க இயன்றவர்கள், நோன்பை முறிக்கின்ற ஒவ்வொரு நாளுக்கும் ஒரு ஏழை மனிதருக்கு உணவளித்து ஈடு செய்து கொள்ளலாம். (அதிகமான நன்னெறியான காரியங்களை) ஒருவர் தாமாகவே முன் வந்து செய்தால், அது மேலானதேயாகும். ஆனால் நீங்கள் மட்டும் அறிந்திருந்தால், நோன்பிருத்தலே உங்களுக்குச் சிறந்ததாகும்.

شَهْرُ رَمَضَانَ الَّذِىْٓ اُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ هُدًى لِّلنَّاسِ وَ بَيِّنٰتٍ مِّنَ الْهُدٰى وَالْفُرْقَانِ فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ وَمَنْ كَانَ مَرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ يُرِيْدُ اللّٰهُ بِكُمُ الْيُسْرَ وَلَا يُرِيْدُ بِكُمُ الْعُسْرَ وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللّٰهَ عَلٰى مَا هَدٰىكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ

185. Ramadan is the month during which the Quran was revealed, providing guidance for the people, clear teachings, and the statute book. Those of you who witness this month shall fast therein. Those who are ill or traveling may substitute the same number of other days. God wishes for you convenience, not hardship, that you may fulfill your obligations, and to glorify God for guiding you, and to express your appreciation.

185. ரமளான் எனும் மாதத்தின் போதுதான், மனிதர்களுக்கு வழிகாட்டல், தெளிவான போதனைகள், மற்றும் சட்டப் புத்தகத்தை வழங்குவதான இந்தக் குர்ஆன் வெளிப்படுத்தப்பட்டது. உங்களில் இந்த மாதத்தைக் காண்பவர்கள் அதில் நோன்பிருத்தல் வேண்டும். நோயிலோ அல்லது பிரயாணத்திலோ இருக்கின்றவர்கள் அதே எண்ணிக்கையிலான மற்ற நாட்களைக் கொண்டு ஈடு செய்து கொள்ளலாம். கடவுள் உங்களுக்குச் சௌகரியத்தையே விரும்புகின்றார், கஷ்டத்தை அல்ல, உங்களுடைய கடமைகளை நீங்கள் பூர்த்தி செய்யவும், உங்களுக்கு வழி காட்டியதற்காக கடவுள்-ஐத் துதிக்கவும், உங்களுடைய நன்றியறிதலை வெளிப்படுத்தவும் கூடும் என்பதற்காக

அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய
இறைவனின் திருப்பெயரால்

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கி ணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங் களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக் குள்ளேயே கொண்டதாக இருக் கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள் ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணி தல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

ஓர் உலகம்
ஓர்-இறை
ஒரே செய்தி

Book - Post

To

*If undelivered Please return to*

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662